# 73. பூரணக்கண்ணி

**ஆரணஞ்சொல் கின்றபடி யஞ்சகத்தி லான்மாவிற்**
**பூரணம தாகப் பொலிந்துளவெம் பூரணமே.**

ஆரணம் சொல்கின்றபடி அம் சகத்தில் ஆன்மாவில்
பூரணம் அது ஆகப் பொலிந்துஉள எம்பூரணமே.

வேதம் சொல்லுகின்றபடி, அழகிய உலகிலும் உயிரிலும் நிறைவாக விளங்குகின்ற எம்முடைய பூரணமே! 1

**எண்மைகணித் திந்நா ளெனக்கறிவை யூட்டவந்த**
**சண்முகமே யாதிசிவ சற்குருவே பூரணமே.**

*எண்மை கணித்து இந்நாள் எனக்கு அறிவை ஊட்டவந்த*
*சண்முகமே ஆதி சிவ சற்குருவே பூரணமே.*

எனது எளிமையைக் கணித்து, இந்நாளில் எனக்கு அறிவை ஊட்டுதற்கு ஓர் ஞானாசிரியனாய் வந்த சண்முகமே! ஆதி சிவசற்குருவே பூரணமே! 2

**சுட்டுணர்வுஞ் சூனியமுஞ் சொல்லவொண்ணாச் சோதியென்று**
**கட்டுரைக்கு நான்மறையுங் காணாத பூரணமே.**

*சுட்டு உணர்வும் சூனியமும் சொல்ல ஒண்ணாச் சோதி என்று*
*கட்டு உரைக்கும் நான்மறையும் காணாத பூரணமே.*

சுட்டி அறியப்படுதலும் சூனியமும் என்று சொல்ல முடியாத அறிவொளி என்று உண்மையை உரைக்கும் நான்கு வேதங்களும் கூடக் காணமுடியாத பூரணமே! 3

**ஆனியின் றெங்கணுமென் னாதிநீ நிற்றலினால்**
**சூனியமென் றெவ்விடத்தைச் சொல்லலாம் பூரணமே.**

*ஆனி இன்று எங்கணும் என் ஆதி நீ நிற்றலினால்*
*சூனியம் என்று எவ்விடத்தைச் சொல்லலாம் பூரணமே.*

எல்லை இல்லாமல் எவ்விடமும் என் ஆதியாகிய நீ நிறைந்திருத்தலினால், சூனியம் என்று எந்த இடத்தைச் சொல்ல முடியும்? பூரணமே! 4

**மறப்பு நினைப்புமிலெம் மானுன் சுபாவச்**
**சிறப்பினை யாருரைப்பார் செவ்வனே பூரணமே.**

*மறப்பும் நினைப்பும் இல்எம்மான் உன் சுபாவச்*
*சிறப்பினை யார்உரைப்பார் செவ்வனே பூரணமே.*

மறத்தலும் நினைத்தலும் என்னும் இரண்டு நிலைகளும் இல்லாத எம் கடவுளான உன் சுவாபச் சிறப்பினை, யார் அளவிட்டுச் செவ்வனே உரைக்கக் கூடியவர் பூரணமே? 5

**வேதாக மங்களிகழ் வோரும் விவேகநிட்டை**
**ஓதாத வேட்டோரு மொன்னாரே பூரணமே.**

*வேத ஆகமங்கள் இகழ்வோரும் விவேக நிட்டை*
*ஓதாத வேட்டோரும் ஒன்னாரே பூரணமே.*

வேதங்களையும், ஆகமங்களையும் இகழ்ந்து கூறுவோரும், ஞான நிட்டை ஓதாத வேள்வியைச் செய்வோரும் பகைவரே பூரணமே! 6

**அன்பான மூர்த்தியைப்போ லான்மாவு மாதல்வீ**
**டென்போ ரனுபவந்தா னில்லாரே பூரணமே.**

*அன்புஆன மூர்த்தியைப்போல் ஆன்மாவும் ஆதல் வீடு*
*என்போர் அனுபவம்தான் இல்லாரே பூரணமே.*

பூரணமே! அன்பே வடிவான மூர்த்தியைப்போல் ஆன்மாவும் வடிவம் கொள்ளுதல் வீடுபேறு என்று கூறுவோர், அனுபவம்தான் இல்லாதவரல்லவோ? 7

**சங்கப் பயிரவியைச் சாம்பவியைக் கேசரியை**
**அங்கமென வுள்ளகைகாட் டற்புதமே பூரணமே.**

*சங்கப் பயிரவியைச் சாம்பவியைக் கேசரியை*
*அங்கம் என உள்ள கைகாட்டு அற்புதமே பூரணமே.*

அழகிய பயிரவியை, சாம்பவியை, கேசரியை முத்திரை என்று உள்ள வலக்கை காட்டுதல் அற்புதமே பூரணமே! 8

**கைகாட்டு மார்க்கநின்றே காண்போர் நிருவிகற்ப**
**மெய்வாழ்க்கை மேவுவது மெய்யேயெம் பூரணமே.**

*கைகாட்டு மார்க்கம் நின்றே காண்போர் நிருவிகற்ப*
*மெய்வாழ்க்கை மேவுவது மெய்யே எம் பூரணமே.*

வலக்கையால் சின் முத்திரை காட்டும் நெறியில் நின்றே உன்னைக் காண்பவர், நிருவிகற்ப மெய் வாழ்க்கையைச் சேர்வது மெய்யே எம்முடைய பூரணமே! 9

**ஈரெண் சகச்சிரசந் தப்பா வியம்பியமெய்**
**ஆரியனை யாண்டவின்ப வன்பேசம் பூரணமே.**

ஈர்எண் சகச்சிர சந்தப்பா இயம்பிய மெய்
ஆரியனை ஆண்ட இன்ப அன்பே சம்பூரணமே.

பதினாறாயிரம் சந்தப்பாக்கள் பாடியருளிய மெய்ஞ் ஞானியான அருணகிரிநாதரை அடிமைகொண்ட இன்ப அன்பே! சம்பூரணமே! 10

***ஆகப்பிரபந்தம் எழுபத்துமூன்றினும் போந்த திருப்பாடல் - 1262***

***கடவுள்வணக்கச் செய்யுள் - 3***

***ஆகத் திருப்பாடல் - 1265***